**<u>HMOP .No. 75/2020</u>**

**<u>Date : 22.12.2022</u>**

***<u>ம.சா.1 முத்துக்குமார்</u>***

***<u>எ.த.கு.வி</u>***

நான் பி.பி.ஏ., படித்துள்ளேன். நானும் எதிர்மனுதாரும் 2019ம் ஆண்டு வரை ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். எதிர்மனுதாருடன் எனக்கு ஏற்பட்ட திருமணம் முதல் திருமணம் ஆகும். எதிர்மனுதாரை திருமணம் செய்வதற்கு முன்னர் நான் வேறு யாரையும் திருமணம் செய்யவில்லை. எனக்கு ஏற்கனவே ஸ்ரீதேவி என்ற மாரித்தாயியுடன் திருமணம் நடைபெற்றது என்றாலும், அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் மாரித்தாய் என்ற ஸ்ரீதேவிக்கும் நடைபெற்ற திருமண பயனாக எங்களுக்கு அசோக் என்ற குழந்தை உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாருக்கும் பெரியோர்களால் பேசி நிச்சயிக்கப்பட்டு தான் திருமணம் நடைபெற்றது. எனது ஊரான வடக்கு அழகு நாச்சியார்புரத்தில் உள்ள வடகாசி அம்மன் கோவிலில் வைத்து எனக்கும் எதிர்மனுதாருக்கும் 29.08.2014ல் திருமணம் நடைபெற்றது. எனக்கும் எதிர்மனுதாருக்கும் வடகாசி அம்மன் கோவிலில் வைத்து திருமணம் நடைபெறவில்லை என்றாலும், எனது வீட்டில் வைத்து தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாருக்கும் திருமண பயனாக திரிசிகா என்ற பெண்குழந்தை உள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் நானும் எதிர்மனுதாரும் எனது பெற்றோருடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். திருமண சமயம் எனது தகப்பனார் ரயில்வேயில் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருந்தார். எனது தகப்பனார் ரயில்வேயில் ஓய்வு பெற்ற பின்னர் வேறு வேலைக்கு எதுவும் செல்லாமல் வீட்டில் சும்மா தான் உள்ளார். திருமணத்திற்கு பின்னர் என்னையும் எனது குடும்பத்தாரையும் நல்ல முறையில் பராமரித்தார் ஏ்னறால் சரியல்ல. நான் வேலைக்கு சென்ற பின்னர் வீட்டில் உள்ள எனது தகப்பனார் எதிர்மனுதாருடன் தவறாக நடந்து கொள்ள முற்பட்டது சம்பந்தமாக எதிர்மனுதார் என்னிடம் புகார் அளித்தும் நான் அதுகுறித்து எதுவும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இதுகுறித்து நான் விசாரிக்காததால் எதிர்மனுதார் அவரது பெற்றோரிடம் சொல்லி அவர்கள் இதுகுறித்து எனது அருகில்

வசிப்பவர்களிடம் கேட்டபோது எனக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்றதையும், எனது தகப்பனாரின் செயலால் தான் அவரும் பிரிந்து சென்றதாக கூறினார்கள் என்றால் சரியல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள கணபதி என்னை தாக்கியது சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் கணபதி என்னை தாக்கியிருந்தால் நான் காவல்நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றாலும், அவ்வாறு ஒரு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் அதுகுறித்து புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல எதிர்மனுதாரின் செயல்பாடு குறித்து மனுவில் பொய்யாக காரணம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் என்னை எப்பொழுதும் உடலளவிலோ, மனதளவிலோ கொடுமைப்படுத்தியது கிடையாது என்றால் சரியல்ல. ஜீலை 2019ல் நானும் எனது பெற்றோரும் சேர்ந்து எதிர்மனுதாரை அடித்து வீட்டை விட்டு துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் தான் ஒரு சின்ன பிரச்சனை காரணமாக அவராக சென்றுவிட்டார். எதிர்மனுதாருக்கும் எனது பெற்றோருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் சிதம்பராபுரத்தில் 2018ம் ஆண்டு நானும் எதிர்மனுதாரும் தனிக்குடித்தனம் இருந்தோம் என்றால் சரிதான். அவ்வாறு தனிக்குடித்தனம் இருந்த பொழுது எதிர்மனுதாரை நான் அடித்து துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரிடம் இருந்து விவாகரத்து பெறவேண்டும் என்பதற்காக பொய்யான காரணம் குறிப்பிடடு இம்மனுவினை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரை சேர்ந்து வாழ அழைத்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதார் என்னுடன் சேர்ந்து வாழ தயராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லை. குழந்தையின் எதிர்காலம் நலன் கருதி என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. எனவே நான் கோரியுள்ள பரிகாரம் கிடைகக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**